[*1995 மார்ச் 28*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 135, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

135—

அவினாசித் தொகுதியில் பட்டா வழங்குதல்

21526*—டாக்டர் மு. **சீனியம்மாள் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, சொக்கம்பாளையத்தில் அரசு நிலம் தேர்வு செய்தும், சலவையாளர், போயர் மற்றும் நாவிதர்களுக்கு பட்டா கொடுக்க காலதாமதமாவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடன் நடவடிக்கை எடுத்து பட்டாக்கள் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அவினாசி தொகுதி, அவினாசி வட்டம், அன்னூர் கிராமம், சொக்கம்பாளையத்தில் 174 சலவையாளர்கள், போயர் மற்றும் நாவிதர் வகுப்பினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்அனுமதியோடு, வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்கள். அதற்காக நன்றியைத்

1995 மார்ச் 28]

தெரிவித்துக் கொள்ளும் முன்னர், மத்திய அரசு மக்களைப் பற்றி நினைக்காதபொழுது, அரிசி விலையைக் குறைத்து அதிசயம் நிகழ்த்தி இருக்கிறவரும். முதுமை நிலையில் உள்ள ஏழை விவசாயிகளுக்கு மாதம் 100 தந்து விந்தை புரிந்திருக்கிறவரும், மக்களது அடிமனதில் அன்பைப் பாய்ச்சும் ஒப்பில்லாத விவசாயியும், நான்கு தமிழ் நாயகி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் அவினாசி தொகுதி மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கேட்ட உடனேயே, சென்ற தீபாவளித் திருநாளில் 167 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.. அதுமட்டுமன்றி, ஆதிதிராவிட நலத் துறையின் சார்பாக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பிறந்தநாளை தாழ்த்தப்பட்ட மக்கள் தினமாகக் கொண்டாட சுமார் 247 பட்டாக்களையும், 247 பேர்களுக்கு சீருடையும் வழங்கினார்கள். 47 பெண்களுக்கு மரக்கன்றுகள் வழங்கினார்கள். கணவன் இறந்த பின்னால் கைபிசைந்து நிற்காமல், சொந்தக் காலில் நிற்பதற்கு, தொழில் என்னும் பந்தக்காலை நட்டு வைத்த எங்கள் தெய்வமே, எங்கள் தொகுதியின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றி கலந்த வணக்கங்களை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பாதங்களுக்கு சமர்ப்பித்து, அமைச்சர் அவர்கள் அவினாசி தொகுதியில் இதுவரை எத்தனை பிற்படுத்தப்பட்ட மக்கள் பட்டா பெற்றுள்ளார்கள், நிலுவையில் உள்ளவர்கள் எத்தனைபேர் என்பதனை அறிவிப்பார்களா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதி என்று தனியாக இல்லை. ஆனால், சென்ற ஆண்டு தமிழகம் முழுவதும் 3,182 பேர்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. இதுகாறும் 16,421 பேர்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டவர் மற்றும் சீர்மரபினருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்டாக்கள் பெற்றுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் வழங்குவதுபோல், இந்த ஆண்டு கோவை மாவட்டத்தில் 47, 47 வீடுகளாக இரண்டு ஒன்றியங்களுக்கும் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் பரிந்துரை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[1995 மார்ச் 28

மாண்புமிகு கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6,577 மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வீடுகள் வழங்குவதற்காக இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 13 கோடியே 81 லட்சத்தை இந்த ஆண்டு பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கிறவர்கள் அதற்குரிய தகுதியைப் பெறுவார்களானால் அவர்களுக்கு நிச்சயமாக வழங்கப்படும். வீட்டுமனைப் பட்டா வழங்கியதுகூட நம்முடைய அவினாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய பரிந்துரையின்பேரில் 48 பேர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டதோடு, அந்தத் தொகுதியைச் சார்ந்த 174 பேர்களுக்கும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய திருக்கரங்களாலே கொடுக்கிற வாய்ப்பினையும் அந்தத் தொகுதி மக்கள் பெற்றார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் செ. அரங்கநாயகம்.

டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த நாவிதர்கள் சலவைத் தொழிலாளிகள், போயர்கள் ஆகியோருக்கான இந்தக் கேள்விக்கு, அவர்களுக்கு 174 பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு சிறப்புச் செய்தியினைச் சொன்னதற்காக நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகின்றேன். நாவிதர்கள் என்று எடுத்துக்கொண்டாலும், சலவைத் தொழிலாளிகள் என்று எடுத்துக் கொண்டாலும், திராவிட இயக்க வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தைப் பெறுகின்றார்கள். இயக்கம் வளர்ந்ததேகூட அவர்கள் பணிபுரிகின்ற இடங்களிலேதான். அப்படிப்பட்டவர்கள் சமுதாயத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட அந்தத் தொகுதியிலே சேர்க்கப்பட்டிருக்கிற காரணத்தினால் அவர்களுக்கு நியாயமான உரிமைகள் கிடைக்காமல், இன்றையதினம் சமுதாயத்திலே அமுத்தப்பட்டு வருகின்றார்கள். அவர்களுடைய கோரிக்கை, அந்த இனசாதிகளை தாழ்த்தப்பட்டோர் பிரிவிலே சேர்க்கப்படுமா அல்லது அதுவரையிலும்—அது மத்திய அரசினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டது அதுவரையிலும்—மிகவும் பிற்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட தொகுதியில் குறைந்தது ஒரு சதவிகிதமாவது இவர்களுக்காக ஒதுக்கப்படுமா என்று அவர்கள் கேட்கிறார்கள். அதுகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி ஒரு தக்க முடிவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா எனத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

1995 மார்ச் 28]

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டிருக்கிற 69 சதவிகித இட ஒதுக்கீடு என்பதை தேசியக் கொள்கையாகக் கொண்டு மத்திய அரசு நிறைவேற்றுமானால் இந்தியா முழுவதும் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மிகவும் பயனடைவார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் இன்றைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு அவர்கள் பயனடைகிற பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு இருக்கின்றன. மத்திய அரசும் ஆதிதிராவிட மக்களுக்கு சில ஒதுக்கீடுகளைத் தருகிறார்கள். ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு இந்த ஆண்டு தமிழகத்திலே வாழ்கிற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் கிடைக்கிற பல்வேறு சலுகைகளைப் பெற்றுத் தருகிற நிதி ஒதுக்கிடுகளை இன்றைக்கு தமிழகத்தில் அறிமுகப் படுத்தியிருக்கிறார்கள் என்பதை மிக்க மகிழ்வோடு இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோன்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போன்று சலவையாளர்கள், நாவிதர்கள் போன்றவர்களை தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் இணைக்கப்பட வேண்டுமானால் அதற்கு மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஏற்கெனவே தமிழகத்தில் வாழ்கிற பல்வேறு பிற்பட்ட மக்களை தமிழக அரசு அங்கீகரித்த பின்னர், மத்திய அரசு அவர்களைப் பிற்பட்ட மக்களாக அங்கீகரிக்க வேண்டுமென்று சொல்லி அனுப்பியதில், இதுகாறும் 30 சாதிகளை மத்திய அரசு அங்கீகரிக்கவில்லை. ஆனால் சலவையாளர்கள், நாவிதர்கள் போன்றவர்களுடைய நியாயமான உணர்வை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவருடைய ஆலோசனையையும், ஆணையையும் பெற்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 136, திரு. டி. வேலையா, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.